# வீட்டுத் தோட்டச் செய்கை தொடர்பான சமூக வழிகாட்டல்கள்

*(வெளியீட்டு இல: 01)*



## உணவு நெருக்கடியை
## வீட்டுத் தோட்டச் செய்கை மூலம் எதிர்கொள்வோம்

- பல்வேறு காரணிகளால் உலகம் உணவுத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கிய வண்ணம் உள்ளது. கோவிட்-19 போன்ற அனர்த்தங்கள் அந்நெருக்கடியை துரிதப்படுத்துபவையாக அமைந்துவிடுகின்றன.
- வீட்டுத் தோட்டச் செய்கை என்பது இவ்வனர்த்தத்தின் போது மாத்திரம் மேற்கொள்ளும் ஒரு தற்காலிக ஏற்பாடாக கருதாமல் எமது ஆரோக்கியமான வாழ்வுக்கு நாம் மேற்கொள்ளும் ஒரு நிரந்தரத் தீர்வாகக் கருத வேண்டும்.
- நாம் எமது வீட்டைச் சூழவுள்ள நிலத்தை/ இடத்தை முறையாகத் திட்டமிடுவதன் மூலம் எமது குடும்பத்துக்கு அன்றாடம் தேவைப்படும் உணவுப் பொருட்களை நாமே உற்பத்தி செய்து கொள்ளலாம்.
- வீட்டுத்தோட்டச் செய்கையின் பிரதான பயன் எமக்கு போசனை நிறைந்த, நச்சுப் பொருட்களற்ற, சுவைமிக்க காய்கறிகள் மற்றும் பழங்களை குறைந்த செலவில், குறைந்த நிலப்பரப்பில் உற்பத்தி செய்வதாகும்.
- ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு, சுமார் 2,000 சதுர அடி நிலத்திலிருந்து ஆண்டு முழுவதற்கும் போதுமான காய்கறிகளை உற்பத்தி செய்து கொள்ள முடியும்.
- மேலதிக அறுவடையை அயலவர்களுக்கு வழங்கவும், விற்பனை செய்து மேலதிக வருமானத்தையும் பெறலாம்.
- இதன் மூலம் நாட்டின் உணவுற்பத்தியில் நாமும் பங்கேற்பதுடன் பூமியை வளப்படுத்திய நன்மையையும் பெற்றுக்கொள்ள முடியும்.
- வீட்டு முற்றம், வீட்டின் பின்புறம், மாடி வீடாயின் மொட்டை மாடி என்பவற்றைப் நடுகைக்காகப் பயன்படுத்தலாம்.
- நடுகைக்கு அதிக சூரிய ஒளி கிடைக்கும், வெட்ட வெளிப் பகுதி மற்றும் போதியளவு நீர் வசதியுள்ள பகுதியைத் தெரிவு செய்து கொள்ள வேண்டு.
- நேரடியாக நிலத்திலோ அல்லது மாடிகள், சீமந்துத் தரைகளில் நடுவதாயின் சாடிகள் மற்றும் பொலித்தீன் உறைகளிலோ நட முடியும்.
- சந்தையில் உள்ள சிறந்த தரத்திலான விதை மற்றும் நடுகைப் பொருட்களைத் தெரிவு செய்து கொள்வதன் மூலம் சிறந்த நோயெதிர்ப்பு மிக்க, கூடிய விளைச்சலைத் தரக்கூடிய பயிர்களை பெற்றுக்கொள்ள உதவும்.

- பொருத்தமான நடுகைப் குழிகள்/ சாடிகளை வளமான மண் கலவை, சேதனப் பசளை என்பவற்றைக் கொண்டு நிரப்பி நேரடியாகவே நாம் தெரிவு செய்யும் பயிர்களை நடலாம்.
- குடும்பத்தில் உள்ள அனைவரும் ஓய்வாக வீடுகளில் இருக்கும் இக்கால கட்டம் எமது வீட்டுத் தோட்டங்களை நிறுவ மிகவும் பொருத்தமானதாகும். வீட்டிலுள்ள அங்கத்தவர்களை இணைத்துக்கொண்டு இத்திட்டத்தின் ஆரம்ப கட்ட வேலைகள் அனைத்தையும் இலகுவாகவும், ஆர்வத்துடனும் மேற்கொள்ளலாம். இது சோர்வடைந்து, முடங்கிப் போயுள்ள எமது உள்ளங்களுக்கு உற்சாகத்தை வழங்கும் ஒரு வித்தியாசமான செயற்பாடாக நிச்சியமாக அமையும், இன்ஷா அல்லாஹ்.

## வீட்டுத் தோட்டத்தில் இலகுவாகப் பயிரிட்டுப் பராமரிக்கக் கூடிய பயிர்கள்

### *1. காய்கறி மற்றும் கீரை வகைகள்*

| காய்கறிப் பயிர் வகை | முதல் அறுவடை (விதைத்ததில் இருந்து) | கீரைப் பயிர் வகை | முதல் அறுவடை (விதைத்ததில் இருந்து) |
|---|---|---|---|
| தக்காளி<br>கத்தரி<br>வெண்டி | 65-75 நாட்களில் | பொன்னாங்கன்னி<br>சாறணை<br>கங்குன் | 28-35 நாட்களில் |
| பாகற்காய்<br>புடலங்காய்<br>பீர்க்கங்காய்<br>கெக்கிரி<br>பூசணி<br>(வட்டக்காய்) | 60-70 நாட்களில் | வல்லாரை | 60-70 நாட்களில் |
| போஞ்சி<br>சிறகவரை<br>பயற்றங்காய் | 65-70 நாட்களில் | பசளிக்கீரை | 40-45 நாட்களில் |
| பீட்ருட்<br>கரட்<br>முள்ளங்கி | 75-90 நாட்களில் | சிறுகீரை<br>தூதுவளை<br>செம்முளைக்கீரை<br>முளைக்கீரை | 40-50 நாட்களில் |
| கோவா<br>லீக்ஸ் | 90 -100 நாட்களில் | புதினாக்கீரை<br>துளசி | 100-120 நாட்களில் |
| மிளகாய்<br>கறிமிளகாய்<br>வெங்காயம் | 75-80 நாட்களில் | கொத்தமல்லிக் கீரை<br>வெந்தயக்கீரை | 60-75 நாட்களில் |
| கருவேப்பிலை<br>றம்பை | 90 -100 நாட்களில் | முருங்கைக்கீரை | 60 – 90 நாட்களில் |
| உருளைக்கிழங்கு | 4 மாதங்கள் | கொஹில | 8 மாதங்கள் |
| வற்றாளை | 3- 4 மாதங்கள் | அகத்திக்கீரை | 8 மாதங்கள் |
| மரவள்ளி | 8 மாதங்கள் | | |
| மஞ்சள்<br>இஞ்சி | 8 மாதங்கள் | | |

*2.* ***பழங்கள்***

| | | | |
|---|---|---|---|
| வாழை | *5 - 7 மாதங்கள்* | நாரத்தை | *2 - 6 வருடங்கள்* |
| மா | *3-5 வருடங்கள்* | எலுமிச்சை | *2 - 6 வருடங்கள்* |
| பப்பாளி | *6- 9 மாதங்கள்* | கொடித்தோடை | *2 - 3 வருடங்கள்* |
| மாதுளை | *6- 9 மாதங்கள்* | திராட்சை | *2 - 3 வருடங்கள்* |
| அன்னாசி | *12 – 18 மாதங்கள்* | டிரகன் புரூட் | *12 – 18 மாதங்கள்* |
| தோடை | *2 - 6 வருடங்கள்* | முள் சீத்தாப்பழம் | *3-5 வருடங்கள்* |

- அனைத்துப் பயிர்கள் தொடர்பான பயிரிடும் முறை, பராமரிப்பு மற்றும் அறுவடை போன்ற விரிவான தொழில்நுட்ப விளக்கங்களை விவசாயத் திணைக்களத்தின் பிரசுரங்கள், உங்கள் பிரதேச விவசாயக் கள உத்தியோகத்தர்கள் ஊடாகவும் பெற்றுக் கொள்ள முடியும்.
- அது மாத்திரமல்லாது, விவசாய அமைச்சினால் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்குடன் செயற்படுத்தியுள்ள பத்து இலட்சம் வீட்டுத் தோட்டங்களை உருவாக்குவதற்கான ‘சௌபாக்கிய’ விஷேட செயற்திட்டத்தின் விபரங்களைப் பெற www.saubagya.lk எனும் அதன் இணையத்தளத்திற்கு விஜயம் செய்யவும். அத்துடன் விவசாயத் திணைக்களத்தின் ‘1920’ எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக நேரடியாக விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.
- மேலும், வீட்டுத் தோட்டம் அமைத்தல், பராமரித்தல் தொடர்பாக தேசிய ஷூரா சபை ஒருங்கிணைத்துள்ள விவசாய தொழிநுட்பக் குழுவின் வழிகாட்டல்களைப் பெற்றுக்கொள்ள www.nationalshoora.com எனும் தேசிய ஷூரா சபையின் இணையத்தளம் மற்றும் அதன் முகநூலை (Facebook) பக்கத்தை நாடவும்.

வீட்டுத் தோட்டச் செய்கை பற்றிய ஒரு சிறிய அறிமுகத்தை வழங்கி, அது தொடர்பான ஆர்வத்தை உங்களில் ஏற்படுத்தி, உங்களுக்கு உள்ள இட வசதி, கால அவகாசம் மற்றும் ஆள்வளம் என்பவற்றுக்கு ஏற்ப நீங்களும் உங்களால் முடியுமான அளவில் ஒரு வீட்டுத் தோட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் எனும் மனவுறுதியை ஏற்படுத்துவதே இவ்வாக்கத்தின் நோக்கமாகும்.

**தயாரிப்பு: தேசிய ஷூரா சபையின் சமூகப் பொருளாதார செயற்குழு**

வெளியீட்டு இல: 01

திகதி: 30-03-2020